## தேசிய மருத்துவத் தகுதித் தேர்வு:

# ஒன்றிய அரசு கைவிட வேண்டும்!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜூன் 15-**

**இளங்கலை மருத்துவ மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த தேசிய அளவிலான தேர்வாகவும், முதுகலை மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வாகவும் ஒன்றிய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள NEXT என்ற தேசிய மருத்துவ தகுதித் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் உடனடியாக அதை ஒன்றிய அரசு கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்,இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று முன்தினம் (13.6.2023) கடிதம் எழுதியுள்ளார்.**

**அதில், மருத்துவ மாணவர் சேர்க்கையில், நீட் தேர்வு ஏற்கெனவே மோசமான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ள நிலையில், NExT தேர்வை அறிமுகப்படுத்துவது கிராமப்புற மற்றும் சமூக ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கும், மாநில அரசின்கீழ் இயங்கும் மருத்துவக் கல்வி நிறுவனங் களுக்கும் பெரிய பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதால், NExT தேர்வு முறையினைக் கைவிட வேண்டுமென்றும், தற்போதுள்ள முறையே தொடர வேண்டும் என்றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இது குறித்து பிரதமருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

இளங்கலை மருத்துவ மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த தேசிய அளவிலான தேர்வாகவும், முதுகலை மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வாக வும் ஒன்றிய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள தேசிய மருத்துவ தகுதித் தேர்வுக்கு (NExT) எங்களின் கடும் எதிர்ப்பினை மீண்டும் தெரிவிக்கும் வகையில் இக்கடிதத்தை எழுதுகிறேன். இது தொடர்பாக உங்களுக்கும் ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சருக்கும் எழுதிய கடிதத்திலும் மனுக்களிலும் எங்களின் மிகக் கடுமையான எதிர்ப்பினை அறிமுக நிலையிலேயே தெரிவித்துள்ளோம்.

**அறிமுக நிலையிலேயே எதிர்ப்பு!**

நீட் நுழைவுத் தேர்வாகட்டும் (NEET); தேசிய மருத்துவ தகுதித் தேர்வாகட்டும் (NExT) அவை அறிமுகம் செய்த போதே தமிழ்நாடு அரசு தொடர்ந்து தனது எதிர்ப்பினை தெரிவித்துள்ளது.

தேசிய மருத்துவ கமிஷன் சட்ட அடிப்படையிலான 'நீட்' நுழைவு தேர்வு முறையிலான மருத்துவ சேர்க்கையால் சமத்துவமின்மை, பள்ளிப் படிப்பு அடிப்படையில் தேர்வில் பிரச்சினை, பொது சுகாதார முறையில் பிரச்சினை ஏற்பட்டு வருகிறது.

இத்தகு நிலையில், புதியதாக அறிமுகம் செய்யப்படும் தேசிய மருத்துவத் தகுதித் தேர்வால் மேலும் பிரச்சினை வலுப்பெறும் என்பதோடு, ஊரகப் பகுதியில் உள்ள மாணவர்களும் சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் வெகுவாக பாதிக்கப்படுவார்கள். அத்துடன்மாநில அரசுகளின் கீழுள்ள பொது மருத்துவ பயிலகங்களும் பாதிப்பிற்குள்ளாகும்.

ஏற்கனவே, தேசிய மருத்துவக் குழுவின் நடைமுறைப்படிதான், அனைத்து மாநிலங்களிலும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டு கற்பிக்கப்பட்டு வருகிறது.

> **நீட் நுழைவுத் தேர்வாகட்டும் (NEET); தேசிய மருத்துவ தகுதித் தேர்வாகட்டும் (NExT) அவை அறிமுகம் செய்த போதே தமிழ் நாடு அரசு தொடர்ந்து தனது எதிர்ப்பினை தெரிவித்துள்ளது.**

**மாணவர்களுக்கு தரப்படும் மனஉளைச்சலை தவிர்ப்பீர்!**

அத்துடன் மாநில மருத்துவப் பல்கலைக் கழகங்களின் மூலம் பாடத்திட்டங்கள், கற்பிக்கும் முறை, தேர்வு முறை உள்ளிட்டவைகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில்தான் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் மூலம் எம்.பி.பி.எஸ். பட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

இப்படிப்பட்ட நிலையில், பொதுவான தகுதித் தேர்வு அறிமுகப்படுத்துவது என்பது நிச்சயம் மாணவர்களுக்கு கூடுதலான சிரமத்தையே கொடுக்கும். கூடுதல் பாடச் சுமை, மன உளைச்சல் இவை மருத்துவ மாணவர்களுக்கு தரப்படுவதை நிச்சயம் தவிர்க்க வேண்டும்.

அத்துடன் இதுபோன்ற தகுதித் தேர்வைக் கட்டாயமாக்குவது மருத்துவக் கற்றல் (CLINICAL LEARNING) மாணவர்களுக்கு ஒரு தடையாக இருக்கும், எம்.பி.பி.எஸ். முடித்த வர்களுக்கு இந்த கிளினிக்கல் முறை மிக முக்கியமாகும். இன்றைய தினம் இளங்கலை மருத்துவ மாணவர்கள் மருத்துவ அறிவியலின் தத்துவார்த்த மற்றும் கிளினிக்கல் அம்சங்களில் கவனம் செலுத்துகிறார்கள். பட்டப் படிப்பிற்குப் பின் தான் முதுகலையில் சேர்பவர்கள் தத்துவார்த்த (THEORETICAL) தேர்வுகளில் கவனம் செலுத்துகிறார்கள்.

ஆனால் இந்த தேசிய மருத்துவ தகுதித் தேர்வு அறிமுகப்படுத்தினால் அத்தகு மாணவர்கள், அவர்களின் மருத்துவத்திறன் வளர்ச்சி தடுக்கும் வகையில் அவர்கள் படிக்கும் போதும் பயிற்சி மேற்கொள்ளும் போதும் தத்துவார்த்த அறிவியலில் மட்டும் கவனம் செலுத்துவர். கிளினிக்கல் தகுதி இல்லாமல் போய்விடும்.

**மாணவர் நலனுக்கு உகந்ததல்ல!**

இவைகளின் காரணமாக நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கேட்டுக் கொள்வது. புதியதாக அறிமுகப்படுத்த இருக்கும் தேசிய மருத்துவ தகுதித் தேர்வு மாணவர் நலனுக்கும் உகந்ததல்ல; மாநில அரசுகளால் நிதி உதவி பெறும் மருத்துவக் கல்லூரிகளுக்கும் உகந்ததல்ல.

இந்த புதிய நடைமுறையானது, மாநில அரசுகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளின் பங்களிப்பை நீர்த்துப் போகச் செய்யும் இன்னொரு நடவடிக்கை என்பதோடு, ஒன்றிய அரசிடம் அதிகாரத்தை மையப்படுத்துவது என்பதாகும். எனவே இந்த தேசிய மருத்துவ தகுதித் தேர்வு முறையை அறிமுகப்படுத்தக்கூடாது என்றும், ஏற்கனவே உள்ள நடைமுறையே நீடிக்கவேண்டும் என்றும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

---

## நைஜீரியாவில் படகு கவிழ்ந்து 103 பேர் பலி!

அபுஜா, ஜூன் 15 -

நைஜீரியாவின் வடக்கே நைஜர் மாகாணத்தில் உள்ள எக்போடி கிராமத்தில் திருமண நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பலர் இதில் பங்கேற்றனர். திருமணம் முடிந்து 300க்கும் மேற்பட்டோர் ஒரு படகில் திரும்பிக் கொண்டிருந்தனர். மேலும் பலர் படகில் தங்களது பைக்குகளை எடுத்து வந்திருந்தனர். அப்போது அதிக பளு காரணமாக படகு திடீரென ஆற்றில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் சிறுவர்கள் உள்பட 103 பேர் பரிதாபமாக பலியாகினர். அதிகாலை 3 மணியளவில் இந்த விபத்து நடந்தது. தகவலறிந்து வந்த மீட்புக் குழுவினர் 100க்கு மேற்பட்டோரை மீட்டுள்ளனர். மேலும், மாயமான பலரை தேடி வருகின்றனர். திருமணத்துக்குச் சென்று விட்டு ஊர் திரும்பிய மக்கள் படகு கவிழ்ந்த விபத்தில் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## 'வாட்ஸ் அப்' பில் வந்தது!

உறுதி குலைந்தவனுக்கு
பலமாக ஒரு படையே இருந்தும்
பயனில்லை உறுதி
கொண்டவனுக்கோ கையில் ஓர்
உடைந்த வாளே போதுமானது

முத்தமிழறிஞர் கலைஞர்.



---

### ராசிபுரம், வெண்ணந்தூர் ஒன்றியங்களில்

## ரூ. 15.56 கோடி மதிப்பிலான 20 சாலை மேம்பாட்டு பணிகள்!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார்!

நாமக்கல், ஜூன் 15 -

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ராசிபுரம், வெண்ணந்தூர் ஒன்றியங்களில் ரூ. 15.56 கோடி மதிப்பிலான 20 சாலை மேம்பாட்டு பணிகளை கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார்

தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (2022 - 2023) வெண்ணந்தூர் ஒன்றியத்தில் 26 கி.மீ. தூரத்திற்கு ரூ. 10 கோடி மதிப்பில் 18 சாலைகள் புதுப்பிக்கும் பணிக்கான துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வெண்ணந்தூர் ஒன்றிய தி.மு.க. செயலாளரும், ஒன்றியக் குழு உறுப்பினருமான ஆர்.எம். துரைசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன், வசந்தி, ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார்.

இதில் கட்டனாச்சம் பட்டி ஊராட்சியில் ரூ 24.09 லட்சம் மதிப்பில் கோரைக்காடு சாலை முதல் முத்துக்காளிப்பட்டி எல்லை சாலை வரையும், இரா. புதுப்பாளையம் ஊராட்சியில் ரூ. 29.60 லட்சம் மதிப்பில் ஆசை டீக்கடை முதல் பட்டணம் சாலை வரையும், ரூ.28.41 லட்சம் மதிப்பில் போதமலை ஆர்.புதுப்பாளையம் முதல் சாணார் தெரு வரை சாலை புதுப்பித்தல் பணி, கல்லாங்குளம் ஊராட்சியில் ரூ.20.15 லட்சம் மதிப்பில் பனங்காடு ஓ.ஹெச்.பி. முதல் கருப்பண்ணன் காடு வரை, தேங்கல்பாளையம் ஊராட்சியில் ரூ 18.07 லட்சம் மதிப்பில் முத்து ஆசிரியர் வீடு முதல் ஆணைப்பட்டியான் காலனி வரை, குட்டலாடம் பட்டி ஊராட்சியில் ரூ. 20.60 லட்சம் மதிப்பில் பனமரத்துப் பட்டி சாலை முதல் மயானம் வரை,

நடுப்பட்டி ஊராட்சியில் ரூ. 157 லட்சம் மதிப்பில் ஆட்டையாம்பட்டி மசக்காளிப்பட்டி சாலை முதல் நரிக்கல்கார்டு வழியாக நடுப்பட்டி தேவேந்திரர் தெரு வரை, அலவாய்ப்பட்டி ஊராட்சியில் ரூ.49.60 லட்சம் மதிப்பில் ஆட்டையாம்பட்டி மசக்காளிப்பட்டி சாலை முதல் அலவாய்ப்பட்டி சாலை வரை, ரூ.24.80 லட்சம் மதிப்பில் ஆட்டையாம் பட்டி மசக்காளிப்பட்டி சாலை முதல் அழகாய் பட்டி சாலை வரை, பழந்தின்னிபட்டி ஊராட்சியில் ரூ. 85.53 லட்சம் மதிப்பில் ஆட்டையாம்பட்டி மசக்காளிப்பட்டி சாலை முதல் பழந்தின்னிப்பட்டி சாலை வரை சாலை மேம்பாடு மற்றும் புதுப்பிக்கும் பணி உள்ளிட்ட 18 பணிகளை நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் துவக்கி வைத்தார்.

தொடர்ந்து தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம் கட்டனாச்சம் பட்டி ஊராட்சியில் 15 வது நிதி குழு மானியம் 2021 - 22 அத்திப்பலகானூர் அருந்ததியர் தெருவில் ரூ. 3 லட்சம் மதிப்பில் பொதுக் கழிப்பிடச் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி மற்றும் ரூ. 5.25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட சமுதாய சுகாதார வளாகத்தையும் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளின் போது மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் ஏ.ஆர். துரைசாமி, சார்பு அணி நிர்வாகிகள் விஜய்பாஸ்கர், எம்.எம்.ரவி, ரவி சதாசிவம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் நிர்மலா சீனிவாசன், பூங்கொடி சத்தியமூர்த்தி, ராஜேந்திரன், சந்தோசம், தங்கதுரை, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ரவீந்திரன் மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதே போல், ராசிபுரம் ஒன்றியத்தில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.5.56 போடி மதிப்பீட்டில் 11 சாலைகள் புதுப்பிக்கும் பணிகளை ராசிபுரம் ஒன்றியக் கழகச் செயலாளரும், ராசிபுரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருமான கே.பி.ஜெகநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தனம், மேகலா ஆகியோர் முன்னிலையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பணிகளை துவக்கி வைத்தார்.

கோனேரிப்பட்டி ஊராட்சியில் ரூ.47.30 லட்சம் மதிப்பில் பட்டணம் காக்காவேரி சாலை முதல் மேட்டுக்காடு சாலை வரை, காக்காவேரி ஊராட்சியில் ரூ. 42.75 லட்சம் மதிப்பில் காக்காவேரி பூசாரி பாளையம் பச்சாயி அம்மன் கோயில் வழி சீராப்பள்ளி வரை, வடுகம் ஊராட்சியில் ரூ. 32.65 லட்சம் மதிப்பில் ராசிபுரம் பட்டணம் புதுப்பட்டி சாலை முதல் களரம்பட்டி சாலை வரை, ரு.67.75 மதிப்பில் வடுகம் போதமலை சாலை மேம்பாடு, ரூ.59.17 லட்சம் மதிப்பில் வடுகம் சீராப்பள்ளி வரை, பொன் ஆயிபாளையம் ஊராட்சியில் ரூ. 34.75 லட்சம் மதிப்பில் ஆயிபாளையம் கொமாரபாளையம் சாலைப்பணி, பொன்குறிச்சி ஊராட்சியில் ரூ. 43.64 லட்சம் மதிப்பில் கல்பாளையம் காட்டுக்கொட்டாய் சாலைப்பணி உள்ளிட்டவற்றை கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் ஏ.கே.பாலசந்திரன் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ராசிபுரம், வெண்ணந்தூர் ஆகிய ஒன்றியங்களில் ரூ.15.56 கோடி மதிப்பில் சாலைகள் புதுப்பிக்கும் பணிகளை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் வெண்ணந்தூர் ஆர்.எம்.துரைசாமி, ராசிபுரம் கே.பி.ஜெகநாதன், மாவட்ட பொருளாளர் ஏ.கே.பாலசந்திரன், மாவட்ட கவுன்சிலர் ஏ.ஆர்.துரைசாமி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

பொறியியல் பிரிவு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 36 / 2023 நாள்: 13.06.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1,2,4,5,7,14,15,23, 26, 29,31,48,59,66,70, 73,82,97,99க் குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 24 பணிகள் | 04.07.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 05.07.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன் ஹால், கோயம்புத்தூர்-1. தொலைபேசி எண்.0422 2396026 Email: commr.coimbatore@tn.gov.in

வெ.ஆ.எண். 276/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 13.06.2023

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/1184/2023 மின்னணு மறு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மின்னணு மறு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது.

நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT Scheme) - 2022-23

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக 18% (GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 10 & 11ல் உள்ள 15 எண்ணிக்கையிலான உட்புற சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மேம்படுத்தும் பணி சிப்பம் மற்றும் முதல் அதிகபட்ச 9 மற்றும் 20 (நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) NSMT Scheme 2022-23 | 9 மற்றும் 20 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.87.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.97.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 27.06.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 28.06.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3026 / ஒப்பந்தப்புள்ளி / 2023

மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/1183/2023 மின்னணு மறு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு மறு ஒப்பம் இரண்டு உறை முறையில்

நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT Scheme) - 2023-24

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக 18% (GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் 11ல் உள்ள 45 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார் சாலை, மேம்படுத்தும் பணி (சிப்பம் 34 மற்றும் 36) (நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) (NSMT Scheme) | 34 மற்றும் 36 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.112.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.150.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 27.06.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 28.06.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3025 / ஒப்பந்தப்புள்ளி / 2023

மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்